**R5809**
**(R5186)**

# Decorum in the House of God
# தேவனுடைய வீட்டில் நல்லொழுக்கம்

*"நீ தேவாலயத்துக்கு போகும் போது உன் நடையை காத்துக்கொள்; மூடர் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்க சேர்வதே நலம்; தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்." (பிரசங்கி 5:1 )*

இங்கே ஞானி சொல்லர்த்தமான காலடியையோ அல்லது நடக்கிறதையோ கூறவில்லை, ஆனால் சில ஞானமான புத்திமதியை கொடுக்கிறார். அதைக் கேட்பவர்கள் நம்மைப்போல சரியானபடி புரிந்துகொள்வார்கள். அவர்கள் தங்கள் அனுதின வாழ்க்கையில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற பொருளுடையதாக இது இருக்கிறது என்பதை புரிந்து கொள்வார்கள்.

"நடையை காத்துக்கொள்." நீ எங்கே போகிறாய் என்பதைக் கவனி. தேவனுடைய வீட்டிற்கு போகும்போது ஒரு கடைத் தெருவுக்கு போகிறது போலவோ அல்லது பொழுதுபோக்கு இடத்திற்கு போகிறது போலவோ போகக்கூடாது. தேவன் தம்முடைய ஜனங்களை சந்திக்கிற இடமாக நினைத்துச் செல். ஞானி தேவனுடைய சபையில் கேட்கப்படுகிறதைக் குறித்து யூகிக்கிறார். மூடர் பலியிடுவதைப் போல பலியிட தயாராகாதீர்கள். இது, சிரிப்பு விளையாட்டுத்தனம், மூடத்தனமான பேச்சு மற்றும் கேலிப்பேச்சு இவைகளை குறிப்பதாக காணப்படுகிறது.

தற்காலத்தில் இந்த வசனம் தேவனுடைய பிள்ளைகள் அனைவராலும் மிகவும் சரியானபடி மனதிற்குள்ளே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பயபக்தி மிகவும் குறைந்து கொண்டிருக்கிறது. தேவன் நம்மை நித்திய வேதனையில் போடுவார் என்கிற பயம் நமக்கு இல்லாமல் போய்விட்டது. நமது பரம பிதா தம்முடைய சிருஷ்டிகளில் இப்படிப்பட்ட தீய எண்ணமுடையவராக இல்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் சந்தை கடைக்கு போவது போல தேவனுடைய வீட்டிற்கு செல்லக்கூடாது. தேவன் தொழப்படுகிற எந்த இடத்திலும் நல்லொழுக்கம் அவசியம் என்ற உண்மையை அநேக கர்த்தருடைய பிள்ளைகள் அறியாதிருக்கிறார்கள்.

**பயபக்தியான நடத்தை வளர்க்கப்படவேண்டும்**

தேவன் நிழலான கோயில்களில் இல்லை என்பதையும் தற்காலத்தில் நாம் தேவனை சபையில் பெற்றிருக்கிறோம் என்பதையும் நாம் உணர வேண்டியவர்களாயிருக்கிறோம். சபையின் அங்கங்கள் கூடுகிறது எங்கேயிருந்தாலும் அங்கே கர்த்தர் இருக்கிறதாக அவர் அறிவித்திருக்கிறார். தேவனுடைய ஆலயத்தை அமைக்கிற ஜீவனுள்ள கற்கள் சொல்லர்த்தமான கற்களால் செய்யப்பட்ட கோயில்களைப் போல முழுமையாக மரியாதை செலுத்தப்பட வேண்டும்.

நாம் ஒரு வீட்டின் வரவேற்பறையில் கூடினாலும் அல்லது ஒரு ஜெபக் கூடத்தில் கூடினாலும் அல்லது ஒரு சங்கீத சபாவில் கூடினாலும், தேவனுடைய பிள்ளைகள் கூடுகிற இடம் எதுவாக இருந்தாலும் அது பரிசுத்தமான ஒரு இடமாக ஆகிறது. அதை நெருங்குகிறவர்கள் யாராக இருந்தாலும் தனது நடவடிக்கையில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர் அதை அடைந்தபோது தான் எங்கே இருக்கிறேன் என்பதை அவர் உணர்ந்தவராக, அவர் கேட்க – கவனிக்க தயாராக வேண்டும் – கேளிக்கையுடன் அல்ல. பேச்சுக்கள் எல்லாம் போதிக்கக்கூடியதாக ஆவிக்குரிய வகையில் கட்டுகிறதாக இருக்க வேண்டும். இந்த வகையில் நாம் பேச இயலவில்லை என்றால், நாம் பிரசங்கத்தை கேட்பதும் பாட்டில் இணைவதும் பின் வெளியேறுவதும் நல்லது.

எப்படிப்பட்ட பேச்சு அங்கு கொடுக்கப்பட்டாலும், வெறும் அந்த இடத்துக்காக அல்லாமல் அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக பயபக்தியுடன் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட சகோதரனையும் ஒரு குறிப்பிட்ட சகோதரியையும் அழைத்து "அவர்கள் பாடுபடுவதை நாம் கேட்போம்" என்று கூறுவது சரியான நடவடிக்கை அல்ல.

பயபக்தியைக் காட்டிலும் கர்த்தருடைய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இருக்கிறதா என்பதை நாம் அறிவோம். பயபக்தியில்லாத யாரையும் தேவன் அழைக்க மாட்டார். அந்த பண்பு பலமாக வளர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் பயம் விரட்டப்பட்டபொழுது, பயபக்தி குறைவது இயல்பானதாக இருக்கிறது. நாம் தேவனுடைய வீட்டிற்கோ அல்லது தெய்வீக ஊழியம் நடக்கிற இடத்திற்கோ செல்லும்பொழுது இந்த விஷயத்தில் விசேஷித்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## மற்றவர்களது உரிமைகளில் கவனம்

நாம் தேவனுடைய ஆலயத்துக்கு போகும்பொழுது நமது நடக்கைகளை கவனித்தால் மட்டும் போதாது, நாம் என்ன எடுத்துச் செல்கிறோம் என்பதையும் கவனிக்க வேண்டும். குளித்துவிட்டு, சுத்தமான ஆடைகள் அணிந்து செல்ல வேண்டும். நம்மேல் எந்தவித துர்நாற்றமும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். சரியாக பயிற்றுவிக்கப்படாத குழந்தைகளையும் நாம் அழைத்துச் செல்லக்கூடாது. இப்படியாக மற்றவர்களை தொந்தரவு பண்ணாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகளை வீட்டில் விட்டுவர முடியாத நிலை இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் போது பெற்றோர் சுழற்சி முறையில் கூட்டங்களுக்கு வரலாம். குழந்தைகளது வருகை மற்றவர்களது ஆவிக்குரிய கவனத்திற்கு தடைகள் விளைவிக்குமானால் குழந்தைகளை அழைத்துச் செல்லாமல் தவிர்ப்பது நல்லது. கூட்டங்களில் குழந்தைகள் தொந்தரவு பண்ணாத வயது வரும் வரை குழந்தைகள் வீட்டில் விடப்படுவதற்கு ஒரு வழிவகை செய்யப்பட வேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் செய்யும் காரியங்களில் பழக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு தொந்தரவாக இருக்கிறார்கள் என்பதை உணராதிருக்கிறார்கள். அவர்களது ஒவ்வொரு அசைவும் மற்றவர்களுக்கு தொந்தரவாக இருக்கலாம். மற்றவர்கள் தங்களது பொறுமைக்கு வந்த சோதனைகளை பெறுகிறார்கள்.

## காலம் தவறாமை குணலட்சண அபிவிருத்திக்கு ஒரு அடையாளம்

சிலர் தமது நடக்கைகளை மாத்திரமல்ல தங்களது கைக்கடிகாரத்தையும் கவனிக்க வேண்டிவர்களாக இருக்கிறார்கள். காலதாமதமாக கூட்டங்களுக்கு வருவது நீதி மற்றும் அன்பு என்ற இரண்டு கொள்கைகளுக்கும் இசைவில்லாதது. கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டிய வர்கள் அனைவரும் மற்றவர்களுக்கு நீதியாக குறித்த நேரத்தில் வரவேண்டும். சரியான நேரத்திற்கு கூட்டத்திற்கு வரும்படி தங்களது காரியங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். காலம் தவறாமைக்காகவும், மற்றவர்களை தொந்தரவு செய்யாதிருக்கவும் நாம் எடுக்கும் முயற்சிகளை தேவன் நிச்சயம் கவனிப்பார். இது குணலட்சண அபிவிருத்திக்கு ஒரு அடையாளம். இது அவரது அங்கீகாரத்தை பெற்று நம்மை தேவனுடைய ராஜ்யத்துக்கு தயார்படுத்தும். மற்றவர்களது உரிமைகளில் அலட்சியமாக இருப்பவர்கள் கிறிஸ்துவின் ஆவியில், அன்பின் ஆவியில் குறைவுபட்டிருப்பார்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் ஆவியைப் பெறாதவர்கள், நன்கு அபிவிருத்தி அடையாதவர்கள் ராஜ்யத்தில் இடம் பெற மாட்டார்கள்.

அடங்காத குழந்தைகள், காலதாமதம் முதலானவைகள் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதிபடுத்துவதை நிர்ணயிக்கிறது. இதன்மூலம் நாம் கிரியைகளின்படி நியாயம் தீர்க்கப்படுகிறோம் என்றோ அல்லது, மற்றவர்களின் கிரியைகளை வைத்து அவர்களை நாம் நியாயந்தீர்க்க நமக்கு உரிமையிருக்கிறது என்றோ நாங்கள் அர்த்தப்படுத்தவில்லை. "நியாயந் தீர்க்காதே" என்று கர்த்தர் கூறினார். கர்த்தருடைய சித்தத்தை செய்யும்படியான நமது முயற்சிகள் நமது மனதின் விருப்பங்களுக்கு சமமாக இருக்கிறது என்பதை காண்பிக்க வேண்டும். இதற்கு இசைவாக நாம் வாழ தீர்மானித்து முயற்சியை அப்பியாசப்படுத்துவோமானால், உயிர்த்தெழுதலில் நமது மாற்றத்தை அனுபவிக்கும் பொழுது, நாம் சந்தோஷமாக இருப்போம்.